உ

ஸ்ரீராமஜெயம்.

அழகியமணவாளதாசரென்கிற

திவ்வியகவி,

பிள்ளைப்பெருமாளையங்கார்.

வெண்பாவினலருளிச்செய்த

திருவேங்கடமாலை

மூலபாடம்.

இஃது.

திருத்தணிகை,

ஆறுமுகசுவாமிகளால்

பரிசோதித்து,

(*)

சிந்திமாநகரம்.

சாமிமுதலியார் - குமாரர்

வேம்புலிமுதலியாரது

வேதாந்தசமரசவிளக்க-அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம௵ - கார்த்திகைமீ

()(*)()

உ

கடவுள் துணை.

திருவேங்கடமாலை.

மூலபாடம்.

நூன்முகம்.

திண்பார்புகழுந்திருவேங்கடமாலை
வெண்பாவாணூறும்விளம்புதற்குத் கண்பாராய்
நாராயணாவடியேனாடுந்தமிழ்வேத
பாராயணாசடகோபா. (க)

மூலமேயென்றகரிமுன்வந்திடர்தொலைத்து
நீலமேகம்போலநின்றானைப் பாலாய
வேலைநடுவிற்றுயிலும்வித்தகனைவேங்கடத்து
மாலையன்றிப்பாடாதென்வாய். (உ)

ஆழ்வார்கள்செந்தமிழையாதரித்தவேங்கடமென்
றாழ்வானபுன்சொல்லுந்தாங்குமா லேழ்பாரும்
வெல்லுங்கதிர்மணியும்வெம்பரலுஞ்செஞ்சாந்தும்
புல்லும்பொறுத்தமையேபோல். (௩)

நூல்.

—(✿)—

பொன்னுமணியும் பொலிந்தோங்கிப்பார்மகட்கு
மின்னுமணிமுடியாம்வேங்கடமே மன்னும்
பரமபதநாட்டினன்பையரவின்சூட்டிற்
பிரமபதநாட்டினன்சேர்வு. (க)

சோதிமதிவந்துதவழ்சோலைமலைபோதிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர்வேங்கடமே போதி
விருப்பாற்கடலானிப்பூர்ந்தார்க்கெட்டாத
திருப்பாற்கடலான்சிலம்பு (உ)

மாலைக்கோலைத்திரியும்வையகத்தோர்தம்பிறவி
சோலைக்கோர்வங்கமாம்வேங்கடமே சோலைத்
தருமாதனைநட்டான்றண்முல்லையாயர்
தருமாதனைநட்டான்சார்பு, (ங)

நாலுதிசைமுகமுநண்ணுதலாலொண்கமல
மேலுறலால்வேதாவாம்வேங்கடமே சாலுறையு
மண்மயக்கந்தேற்றுவித்தான்மாற்றுதல்போலாரியனு
லுண்மயக்கந்தேற்றுவித்தானூர், (ச)

பாணிபிறைகொன்றைபணிசூழ்மானேந்தி
வேணியரனைப்பொருவும்வேங்கடமே யானிநிறப்
பீதாம்பரனார்பிரமர்வாழண்டங்கண்
மீதாம்பரனார்விருப்பு, (ரு)

மாலாய்ச்சதிதழுவிவச்சிரமேந்திப்புகர்மா
மேலாய்ப்புரந்தரனும்வேங்கடமே நாலாய்க்
கோர்வாருமந்தரத்தான்கேட்டமரர்வேட்டுந்
தார்வாருமந்தரத்தான்சார்பு. (சு)

வெள்ளிபுணர்ந்தாறுமுகமன்னிமயின்மேற்கொள்ளலால்
வெள்ளிலைவேல்வேள்போலும்வேங்கடமே யுள்ளினைத்
தண்கமலப்பார்வையான்றன்னடியார்மேல்வைக்குஞ்
செங்கமலப்பார்வையான்சேர்பு. (எ)

புள்ளரவனீராவம்போர்மாவரவுமரு
வெள்ளரவவெற்பாகும்வேங்கடமே யொள்ளரிபாய்
மாகனகம்பத்தினர்வாய்கண்கையுந்திபதங்
கோகனகம்பத்தினர்குன்று. (அ)

துய்யசெம்பொற்கோயிற்சுடரெரிப்பக்கண்முகிழ்த்து
வெய்யவன்றோமாவிடரும்வேங்கடமே யையிருநூ
றானமுகப்பாம்பணையாரானிரைப்பினூதிவருங்
கானமுகப்பாம்பணையர்காப்பு, (கூ)

மாண்டுபிறக்குந்துயர்போய்வைகுந்தம்புக்கவரு
மீண்டுதொழக்காதலிக்கும்வேங்கடமே பாண்டுமக
னேறிரதப்பாகனுரேத்துமடியார்நாவி
லூறிரதப்பாகனூர், (ய)

கோலியொருநான்குகுலமறையுநாற்றிசையும்
வேலியெனநின்றேத்தும்வேங்கடமே வாலிதனை
நண்பாவையாதரித்தான்ஞானமுதலாழ்வார்கள்
வெண்பாவையாதரித்தான்வெற்பு. (யக)

தெள்ளியதோர்வீடருளுஞ்சீர்கேட்டுப்பொன்மலையும்
வெள்ளிமலையும்பணியும்வேங்கடமே யுள்ளின்
கொடிவாகனத்தான்குளிர்ந்திருண்டகாரின்
வடிவாகனத்தான்வரை. (யஉ)

எப்பூதலமுமிறைஞ்சித்திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும்வேங்கடமே கொப்பூ
ழிலகுமுண்டகந்தரத்தானின்றளிக்குமீரே
ழுலகுமுண்டகந்தரத்தானூர், (யங)

நோவினையுநோயினையுநோய்செய்வினையியுனைம்
தீவினையுந்தீர்த்தருளும்வேங்கடமே மூவினைசெய்
மூவடியாய்ப்பச்சென்றான்முன்னாளகலிகைக்குச்
சேவடிவாய்ப்பச்சென்றான்சேர்வு, (யச)

பித்துமலடூமைமுடம்பேய்குருடுகூன்செவிடு
மெய்த்துயர்போய்த்தீர்த்தருளும்வேங்கடமே பத்தருக்கு

வெந்துக்கங்காப்பான்மலருந்திபினுலகந்
தந்ததுக்கங்காப்பான்றலம், (௰௫)

வாடப்பசித்தவரியுழுவைவாலாட்டி
மேடத்தைப்பார்த்துறுக்கும்வேங்கடமே கூடத்துக்
கம்பவளமாவென்ருன்காசினிக்கும்வெண்ணெய்க்குஞ்
செம்பவளமாவென்ருன் சேர்வு, (௰௬)

தாவிவரும்வானரங்கடண்குவட்டிற்கற்கடக்
மேவிவரக்கண்டோடும்வேங்கடமே காவிரிசூழ்
பொற்றிருவரங்கத்தான்போதன்சிவனென்னு
மற்றிருவரங்கத்தான் வாழ்வு, (௰௭)

ஒண்சிந்துரத்தைவெறுத்தூடும்பிடிவேழம்
விண்சிங்கங்கண்டணைக்கும்வேங்கடமே யொண்சிந்தைக்
கோராவிருந்தானொருநாள்விதுரனுக்கு
வாராவிருந்தான்வரை. (௰௮)

மாதுமடக்கன்னிகழைவந்தனுககம்பத்தின்
மீதினடிப்பாளொக்கும்வேங்கடமே யூதுகுழற்
பாலன்பாலாக்குவித்தான் பஞ்சவர்க்காநூற்றுவரைக்
காலன்பாலாக்குவித்தான் காப்பு, (௰௯)

மன்னுகுடிக்குறவர்வானூர்துலாத்திடையே
மின்னுமணிநிறுக்கும்வேங்கடமே யென்னு
ளரவிந்தப்போதகத்தானன்பாலழைத்த
கரவிந்தப்போதகத்தான்காப்பு (௨௰)

கொல்லைக்குறவர்குளிர்மதிமானைக்ககன
வில்லைக்குளித்தெய்யும்வேங்கடமே கல்லை
யரிவைவடிவாக்கினனன்னமாய்வேத
விரிவைவடிவாக்கினன் வெற்பு, (௨௧)

தேமேறித்தேன்வைக்குந்திண்கழைமேல்விண்மகர
மீமேறிமேவல்கொடியாம்வேங்கடமே வானேறித்
திமுகனைகத்திருப்பார்சேவடிக்காளானவரைக்
காமுகனைகத்திருப்பார்காப்பு. (௨௨)

ஒல்கொம்பித்தேனிறூலார்பிறைக்கோட்டாலுடைந்து
விண்ணரும்பவாய்நிறைக்கும்வேங்கடமே வண்ணரும்ப
கம்பத்தானைக்கடுத்தார்காரரக்கர்போர்மாளக்
கம்பத்தானைக்கடுத்தார்காப்பு (௨௩)

கூனலிளவெண்குருகுகோனேரியில்விசும்பூர்
மீனநிழலைக்கொத்தும்வேங்கடமே கானகத்துப்
பொன்றுருழையெய்தார்பூங்கழலேதஞ்சமென
வுன்றுருழையெய்தாரூர், (௨௪)

மண்மூலந்தாவென்றுமந்திகடுவற்குரைப்ப
விண்மூலங்கேட்டேங்கும்வேங்கடமே யொண்மூல
வேதத்திருக்குழையார்வெய்யோதிரண்டனைய
சீதத்திருக்குழையார்சேர்வு. (௨௫)

காலவிட்டப்பொன்னாசனன்னுதலாருந்தொரு
மேலவிட்டந்தொட்டிழியும்வேங்கடமே யாலமிட்ட
பொற்புக்களங்கறுத்தார்போர்சரிபவாணன்றோள்
வெற்புக்களங்கறுத்தார்வீடு, (௨௬)

பானிறங்கொடெங்கினிளம்பாளைவிரியச்சுனையின்
மீனினங்கொக்கென்றொளிக்கும்வேங்கடமே. வானிமிர்ந்த
வெள்ளத்துக்கப்பாலான்மெய்ப்பரமயோகியர்தம்
முள்ளத்துக்கப்பாலானூர். (௨௭)

கொம்பணியுந்தேமாங்குயில்கருடன்போற்கூவ
வெம்பணிகள்புற்றடையும்வேங்கடமே வம்பணியிம்
பின்னணிந்துகாப்பார்மிசைவைத்தார்பத்தரைத்தம்
முன்னணிந்துகாப்பாருவப்பு. (௨௮)

தெங்கிளநீர்வீழச்சிதறுமணியைக்கரிகள்
வெங்கனலென்றஞ்சிப்போம்வேங்கடமே பைங்கழையின்
மாண்டாளைப்பண்டழைத்தார்மாமறையோன்பாற்றோன்றி
மாண்டாளைப்பண்டழைத்தார்வாழ்வு, (௨௯)

அங்கயலுண்மேகமதிரப்பெரும்பாந்தள்
வெங்கயமென்றுங்காக்கும்வேங்கடமே பங்கயத்தே

பம்புவனங்கடந்தாரம்புயத்துமங்கையொடு
வெம்புவனங்கடந்தார்வெற்பு (௫௰)

ங்களிறுமாந்துலவத்திட்டாற்கவளமென்று பொங்கமரி
வெங்களிறுகைநீட்டும்வேங்கடமே
லார்த்தவலம்புரியாரோட்பட்டார்செய்தபிழை
பார்த்தவலம்புரியார்பற்று. (௫௧)

வம்புலியின்வாழ்மானதிரக்குரற்பருவாய்
வெம்புலியைக்கண்டேங்கும்வேங்கடமே நம்புமெனை
விங்கூத்தைக்கண்டிருப்பார்விண்ணோர்காரர்பிறந்து
சாங்கூத்தைக்கண்டிருப்பார்சார்பு (௫௨)

கன்னால்வெடித்தகழைமுத்தங்கார்தொளைத்து
விண்ணாலியோடுதிரும்வேங்கடமே யெண்ணார்
கலங்கவருமஞ்சனையார்கான்முளையையூர்ந்தார்
கலங்கவருமஞ்சனையார்சார்பு, (௫௩)

செல்லுக்குமேற்செல்லுந்திண்ணியவேய்வாசவனார்
வில்லுக்குவாளியாம்வேங்கடமே யெல்லுக்கு
ளந்தகாரம்படைத்தாராரழல்வாயம்பினால்
வெந்தகாரம்படைத்தார்வெற்பு. (௫௪)

பொன்கமழுங்கற்பகத்தின்பூங்காவனத்துக்கு
மென்கமுகங்காலாகும்வேங்கடமே நன்கமரு
மூரத்திகிரியாருதுந்திகிரியார்
வீரத்திகிரியார்வெற்பு (௫௫)

தண்ணிலைக்கண்பிங்கிற்றலைதொடுத்ததேனிறால்
விண்ணிலைக்கன்னடியாம்வேங்கடமே யுண்ணிலைக்குஞ்
சோதிவணங்கரியார்தூயசனகாதியரு
மோதிவணங்கரியாரூர். (௫௬)

தண்கமுகின்பாளைதடங்கதிரின்செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும்வேங்கடமே யொண்கடல்சூழ்
மண்டுவளாநாட்டினன்மகநாகவாரித்திடப்
பண்டுவளாநாட்டினன்பற்று (௫௭)

அங்கதிருங்கான்யர்த்தடர்தில்லையானனைந்து
வெங்கதிருந்தண்கதிராமவேங்கடமே செங்கதிர்வேந்
சேர்ந்தனத்தமைந்தான்றிருத்தாத்தைவிற்கிளையாள்
பூந்தனத்தமைந்தான்பொருப்பு. (௩௮)

சேணுலவுதிங்களனுஞ்சித்தசவேள்வெண்குடைக்கு
வேணுவொருகாம்பாரும்வேங்கடமே கோனுமனத்
தென்னையாளாகத்தானின்னருள்செய்தான்கமல
மின்னையாளாகத்தான்வெற்பு (௩௯)

தேவருடையைந்தருவின்செந்தேனிறால்கிருப
மீவருடைபாய்கின்றவேங்கடமே மூவடிமனை
போயிரந்தாரத்தார்புனையுமொருபதினா
றாயிரந்தாரத்தாரகம். (௪௰)

வன்குறிஞ்சிமாதர்பால்வானோர்மருந்துக்கு
மென்குறிஞ்சித்தேன்மாறும்வேங்கடமே நன்குறிஞ்சிப்
பேய்த்தனஞ்சுவைத்தார்பிறர்க்கமுதீந்தீசனுக்கு
வாய்த்தனஞ்சுவைத்தார்வரை. (௪௧)

வாவுகவின்மந்திநுகர்மாங்கனிக்குக்கற்பகத்தின்
மேவுகவிகைநீட்டும்வேங்கடமே தாவுகடல்
வேகவிலங்கைக்கொண்டார்விடணைவைத்தொழிந்தார்
சாகவிலங்கைக்கொண்டார்சார்பு. (௪௨)

வெள்ளியகன்மீதேவிடர்முளைத்தசெங்காந்தள்
லெள்ளியல்விளக்காம்வேங்கடமே வெள்ளியெனும்
வேதியனாட்டங்கெடுத்தார்மேதினியைப்பாதலமென்
றோதியனாட்டங்கெடுத்தாரூர். (௪௩)

அல்லிமலர்க்காந்தளின்மேலாடுஞ்சுரும்பினங்கண்
மெல்லியர்கள்கைக்கழகாம்வேங்கடமே மல்லினைப்
பண்டறைந்தவன்புடையார்பார்த்தனுக்குத்தத்துவநூல்
விண்டறைந்தவன்புடையார்வெற்பு. (௪௪)

காந்தளிரவலர்போற்கையேற்பக்கொன்றைகொடை
வேந்தனெனப்பொன்சொரியும்வேங்கடமே பூந்துளவின்

காண்மடங்காமார்வத்தார்காணவிரும்பினர்மே
லாண்மடங்காமார்வத்தார்நாடு, (௪௫)

நாகத்தின்மேற்றுறவர்நல்கெறிந்தமாணிக்க
மேகத்தின்மின்புரையும்வேங்கடமே மாகத்தின்
மாத்தாண்டமண்டலத்தார்வாயுண்டுமிழ்ந்தளந்த
காத்தாண்டமண்டலத்தார் காப்பு. (௪௬)

செம்பதுமராகச்சிலைசூழ்பெரும்பாந்தள்
வெம்பரிதியூர்கோளாம்வேங்கடமே யும்பருல
கோதத்தினப்புறத்தானேராலிலைதுயின்றான்
வேதத்தினப்புறத்தான் வெற்பு, (௪௭)

கோலமணிப்பாறையிற்பாய்கோடரங்கள்செங்கதிரோன்
மேலனுமன்பாய்ந்தனையவேங்கடமே நாலுமறை
யாய்ந்தபரதத்துவந்தானென்குடமாடும்
வாய்ந்தபரதத்துவந்தான் வாழ்வு, (௪௮)

கொம்பினிருல்வாங்கநிமிர்குஞ்சரக்கையம்புலிமேல்
வெம்பியெழுங்கோளரவாம்வேங்கடமே தும்பியல
போர்காதுமீர்ந்தார்புனையரக்கிமூக்கினொடு
வார்காதுமீந்தார் வரை (௪௯)

வெண்மைநிகழ்வெண்பளிங்குவட்டத்திற்கண்டுயின்மான்
விண்மதியின்மானேய்க்கும்வேங்கடமே யொண்மதியா
னாலைத்தாமோதரனார்நோக்கவரியார்துளவ
மாலைத்தாமோதரனார் வாழ்வு. (௫௰)

சிலேடைகள்.

காதலித்துச்சார்ந்தவர்க்குங்காமியத்தைச்சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற்றைத்தவிர்க்கும்வேங்கடமே போதகத்தை
மோதிமருப்பொசித்தார்முன்பதினாறாயிரவ
ரோதிமருப்பொசித்தா ரூர். (௫௧)

கேளிவித்தற்கோருங்கேடறவிலைசூழ்வோரும்
வேள்விக்கினமாற்றும்வேங்கடமே சூள்வித்து

முன்பாரதமுடித்தார் மொய்வேர்தாவந்தவிய
வன்பாரதமுடித்தார் வாழ்வு (௫௨)

பொய்யாம்வினையேனைப்போல்வாருமன்பருஞ்செய்
மெய்யாம்வழுத்தேயும்வேங்கடமே செய்யா
டனைத்துவசப்பொற்புள்ளார்தானவரைமோதுந்
சினைத்துவசப்பொற்புள்ளார் சேர்வு (௫௩)

கோட்டிலாவுள்ளத்துக்கோதிலடியவரும்
வேடருமங்கையரைவெல்வேங்கடமே மூடா
மனமாமனைக்கொன்றார்வன்கஞ்சனென்னுஞ்
சின்மாமனைக்கொன்றார்சேர்வு. (௫௪)

மொய்வதனமங்கையர்கள்முன்கையும்யோகியர்கண்
மெய்வயதுமஞ்சுகமார்வேங்கடமே பெய்வளையார்
பாற்றிருப்பாதஞ்சிவந்தார் பற்றினாருள்பிறப்பை
மாற்றிருப்பாதஞ்சிவந்தார்வாழ்வு. (௫௫)

இல்லக்குறத்தியரும்யாக்கிலேவேட்டவரு
மெல்லக்கிழங்கெடுக்கும்வேங்கடமே நல்ல
புதுப்பூவைவண்ணத்தான்போர்முகத்துச்செவ்வாய்
மதுப்பூவைவண்ணத்தான் வாழ்வு. (௫௬)

தேனியலுங்கூந்தலார்செங்கரமுமாதவத்தோர்
மேனியுமையம்பொழியும்வேங்கடமே ஞானியர்க
டங்குறியெட்டக்கரத்தார்தாருரன்மேல்வைத்துவெண்ணெய்
தங்குறியெட்டக்கரத்தார்சார்வு, (௫௭)

காணையிலார்சொற்கேட்டகந்திருவருந்தவரும்
வீணையிராகத்தைவிடும்வேங்கடமே கோணை
யிருங்குண்டையோட்டினேற்பொழிந்நான்கூவின்
மருங்குண்டையோட்டினன்வாழ்வு, (௫௮)

முந்நூன்மறையவருமூதரம்பைமாருநடு
மெய்ந்நூனலங்கவரும்வேங்கடமே பொய்ந்நூலா
மச்சமயக்கத்தினராதரிக்கத்தெய்வங்கள்
லச்சமயக்கத்தினர்வாழ்வு (௫௯)

ஓதுமறைபோற்றுமுருஞ்சங்கலைவிளரு
[illegible]க்கும்வேங்கடமே — கோதைநருமற்
சுற்றுததாரணியார்தூயதிருத்தாளன்றப்
பற்றுததாரணியார் பற்று. (௬௰)

நன்முல்லைபோல்வெண்ணகையார்நாயகர்மேல்வைத்தநெஞ்ச
மென்முல்லையம்புநாடுசேர்வேங்கடமே — முன்மலைந்து
தோற்றமாரீசனார்தோற்றமாயம்புரிய
சீற்றமாரீசனார்வேர்வு (௬௧)

[illegible]
விறுமருப்பிணைசேர்வேங்கடமே — நாளுந்
துளவமலர்க்கண்ணியார்தொண்டாய்நமக்கன்
புளவமலர்க்கண்ணியானூர். (௬௨)

மாதரம்பொன்மேனிவடிவுமவர்குரங்கு
மீதரம்பையைப்பறிக்கும்வேங்கடமே — பூதமைந்தின்
பம்பரமாகாயத்தார்பாடினல்வீடருளு
நம்பரமாகாயத்தார் நாடு (௬௩)

கோன்காவுகற்பவிழிக்கோதையர்கள்பொற்றாளும்
வேன்காமுமமயஞ்சார்வேங்கடமே — நீள்கரனார்
[illegible]ணனார்முத்தலையார்துஞ்சவொருதுஞ்சாலைக்
கூடணனார்முத்தலையார் குன்று (௬௪)

கொங்கைக்கோடேறிக்குலுக்குமரியுங்கரியும்
வெங்கைக்கோடாதரிக்கும்வேங்கடமே — பூங்கைக்கண்
வெற்றவளைச்சங்கெடுத்தார்மேகலைவிட்டங்கைநலை
வைத்தவளைச்சங்கொடுத்தார் வாழ்வு (௬௫)

மாவிற்குயிலுமயிலுமொலிசெய்ய
மேவிப்புயலுறும்வேங்கடமே — பாவிக்குள்
ளானவருடந்தடுத்தாராணிரைக்குக்குன்றேந்தி
வானவருடந்தடுத்தார் வாழ்வு. (௬௬)

காரேறருவிகனகமுமுதுந்தள்ளி
மீனேவெனக்கொழிக்கும்வேங்கடமே — வானோர்கண்

மேகனயனங்கொண்டார்வேணியரன்காண்பரியாக்
காகளயனங்கொண்டார் காப்பு, (௬௭)

கண்டடைந்தவானவருங்காந்தட்குலமலரும்
விண்டவிர்ந்துநிற்கின்றவேங்கடமே தொண்டற்கு
வைகுந்தநாட்டான்மருவுருவமீய்ந்துவைக்கும்
வைகுந்தநாட்டான் வரை (௬௮)

வாம்புலியினொடுவானோர்தினகரனும்
வேழங்களும்வலஞ்செய்வேங்கடமே யூழிக்கட்
சற்றாயினுமினியான்சாராவகையருளு
நற்றாயினுமினியானாடு, (௬௯)

தாட்கமப்பூஞ்சுனைக்கும்சாயங்கள்கோயதுதிரி
வேட்கும்வடிவில்லாவேங்கடமே வாட்கலிய
ளவியப்பாம்பாட்டினார்நச்சுமடுவைக்கலக்கித்
தாவியப்பாம்பாட்டினார் சார்பு, (௭௰)

ஆயுந்துறவறத்தையண்டினமுந்தண்டினரும்
வேயுங்கிளைவிட்டவேங்கடமே தோயுந்
தயிர்க்காத்தாங்கட்டுண்டார்தாரணியிற்றந்த
வுயிர்க்காத்தாங்கட்டுண்டாரூர், (௭௧)

தொண்டொடுமெய்யன்புடையார்தூய்மனமுஞ்சந்தனமும்
விண்டொடுபொற்பாம்பணைசேர்வேங்கடமே தண்டொடுவாள்
கோலமருங்கார்முகத்தார்கோடாழியார்குழையின்
கோலமருங்கார்முகத்தார் குன்று. (௭௨)

கிட்டுநெறியோகியருங்கிள்ளைகளுந்தங்கூடு
விட்டுமறுகூடடையும்வேங்கடமே யெட்டுமத
வாவென்றுவந்தான்வரநாளைவரின்று
போவென்றுவந்தான் பொருப்பு, (௭௩)

மட்டுவளர்சாலியினுமாதவத்தோர்சிந்தையினும்
விட்டுமதிவிளக்கும்வேங்கடமே கட்டுசடை
நீர்க்கங்கையேற்றானிறப்பொழித்தானீள்குறளாய்ப்
பார்க்கங்கையேற்றான் பதி, (௭௪)

புக்கவருமாதவரும்பூமதுவுண்வண்டினமு
மெய்க்கவசம்பூண்டிருக்கும்வேங்கடமே யொக்கவெனே
பண்பதினாலாண்டாரினையோடுங்காலுறைந்த
வண்பதினாலாண்டார் வரை, (௭௫)

தக்கமறையோர்நாவுந்தண்சாரலின்புடையு
மிக்கமனுவிளையும்வேங்கடமே யக்கரவம்
பூண்டார்க்குமாறுடைந்தார்பொங்கோதநீரடைத்து
மீண்டார்க்குமாறுடைத்தார் வெற்பு. (௭௬)

நீடுகொடிமுடியுநீதிநெறிவேதியர்கள்
வீடுமகமருவும்வேங்கடமே கோடுங்
கருத்துளவமாலையார்காணுமனின்ற
மருத்துளவமாலையார் வாழ்வு (௭௭)

சீதங்கொள்சாரலினுஞ்சீர்மறையோரில்லிடத்து
வேதங்கனல்வளரும்வேங்கடமே போதன்
சிரித்துப்புரந்துடைத்தான்றேவரோடுமெண்டம்
விரித்துப்புரந்துடைத்தான் வெற்பு, (௭௮)

நன்கோடுபோலுமுலைநாரியருஞ்சண்பகத்தின்
மென்கோடுங்கற்பகமுஞ்சேர்வேங்கடமே வன்கோடு
கூரிருவராகனார்கோகநகைபூமியென்னு
மோரிருவராரானூர், (௭௯)

தோடஞ்சுங்கோதையர்கள்கொங்கையினுங்குஞ்சரத்தும்
வேடன்சரந்துரக்கும்வேங்கடமே சேடனொனு
மோர்பன்னகத்திடந்தானுற்றுவிரணியனாக்
கூர்பன்னகத்திடந்தான் குன்று, (௮௰)

நாரியர்தங்கூட்டத்தினுநாலுமருவியினும்
வேரினவுஞ்சாந்தொழுகும்வேங்கடமே பாரினுளா
ரற்பசுவர்க்கத்தாரறிவரிபார்முன்மேய்த்த
கற்பசுவர்க்கத்தார் நாடு, (௮௧)

மாதரார்கண்ணுமலைச்சாரலுங்காமர்
வேதமார்க்கஞ்செறியும்வேங்கடமே பாதமாம்

போரப்படத்துவைத்தார்போர்வேயமாற்றாரசர்
வாதப்படத்துவைத்தார் வாழ்வு (௮௨)

எத்திக்குங்காம்புமெயினருமாரத்திலையே
வித்துக்கதிர்விளைக்கும்வேங்கடமே தித்திக்கும்
காரிமாறன்பாவார்காதலித்தார்தம்பிரவி
வாரிமாறன்பாவார் வாழ்வு, (௮௩)

பாரோகேரளியாறும்பல்களிறுநந்தவன்ம
வேரோடலைத்தீர்க்கும்வேங்கடமே காரோதந்
சுட்டகருவிற்படையார்தொண்டரைமீண்டேழுவகைப்
பட்டகருவிற்படையார் பற்று. (௮௪)

நன்காமர்வண்டினமுநால்வாய்மதகரியு
மென்காமரமுழக்கும்வேங்கடமே புன்காம
மேவார்கழலாரெனதுளத்திலென்றலைவை
பூவார்கழலார் பொருப்பு, (௮௫)

பாம்புங்குளிர்சந்தின்பக்கத்திநிற்கின்ற
வேம்புமருத்துவக்கும்வேக்கடமே காம்புகர
மானவனைநான்குடையாராளாய்த்தொழுதேத்தும்
வானவனைநான்குடையார் வாழ்வு, (௮௬)

சாருமருவிதவழ்சாரலுஞ்செஞ்சந்தனத்தின்
வேருமாவமரும்வேங்கடமே நேரு
மதுகையிடவர்க்கறுத்தார்மாமலரோன்சாப
மதுகையிடவர்க்கறுத்தார் வாழ்வு (௮௭)

மண்மட்டுத்தாழ்சுனையும்வட்டசிலாதலமும்
விண்மட்டுத்தாமரைசேர்வேங்கடமே யெண்மட்டும்
பாதமுன்னினைந்தார்பரமபதஞ்சேர்க்கவென்று
போதமுன்னினைந்தார் பொருப்பு, (௮௮)

போதாவிருகூடும்போதுதற்குமோதுதற்கும்
வேதாவினுன்முடியாவேங்கடமே மாதாவின்
விந்துதனைத்துக்கினியான்விம்மியழாதாட்கொண்டான்
முந்துதனைத்துக்கினியான் சார்பு, (௮௯)

போர்க்குமொருபேய்போன் றுயிர்த்தாய்த்திரிவோர்க்கும்
வேர்க்குமணிமுத்திவரும்வேங்கடமே — வாய்க்குமுந்தார்
வண்மைப்பேராயிரந்தான்மன்னினன்மாவலிபாற்
றண்மைப்பேராயிரந்தான் சார்பு, (௯௰)

வாழ்க்கைமனைநீத்தருளும்வாளரியுமாதர்தங்கள்
வேட்கைமறந்திகழும்வேங்கடமே — தோட்கைவிழ
மாகனந்தனைக்கழித்தார்வாழிலங்கைப்பாதகனை
லோகவந்தனைக்கழித்தாரூர், (௯௧)

கூட்டுத்தவருங்கொள்ளரிகளின்றேணக்கும்
வேட்டுவரம்பொழியும்வேங்கடமே — மோட்டுமதத்
தந்திக்கமலத்தார்தாம்பெரும்வீடளித்தா
ருந்திக்கமலத்தாரூர் (௯௨)

வஞ்சமடித்திருப்பார்வாக்குங்கலைக்கோடும்
விஞ்சமடித்திருக்கார்வேங்கடமே — கஞ்சப்
பிரமானந்தத்தான்பிரபஞ்சமாய்த்த
பரமானந்தத்தான் பதி; (௯௩)

சலந்தரங்கண்மடவார்தேன்குழலுங்கோங்கின்முகிழ்
மேலனுகவர்க்கமார்வேங்கடமே — கோலஞ்சே
மாரிலலங்காரத்தார்மற்றும்பல்பூணணிந்த
காரிலலங்காரத்தார்காப்பு. (௯௪)

கொய்யுமலர்ச்சோலைக்கொக்குப்பிணியாளர்
மெய்யும்வடித்தவிரும்வேங்கடமே — ஐயுஞ்
சனனாந்தகனார்தலையிலிதோள்காய்ந்த
சினனாந்தகனார் சிலம்பு, (௯௫)

நோக்கவலைநோயினருந்திநிலைவேண்டுநரும்
போக்கவலைபூலங்கல்வேங்கடமே — காக்கடன்மேற்
[illegible]ண்டுங்காலத்திறப்பார்தம்மைவிழுங்கக்கலி[illegible]
மீண்டுங்காலத்திறப்பார் வெற்பு, (௯௬)

தண்டாமரைக்கிளை[illegible]
[illegible]வேங்கடமே — தொண்டர்

யேத்தனக்குடையானென்னைமுன்னாளெடுத்த
கோவத்தனக்குடையார் குன்று, (௬௭)

வாழ்ரியுஞ்சந்தனந்தோய்மாருதமுந்தாக்குதலால்
வேயுமருப்புகுதும்வேங்கடமே நீழலமர்
பஞ்சவடிகாட்டினன்பாரளப்பான்போலெவர்க்கும்
கஞ்சவடிகாட்டினன் காப்பு, (௬௮)

எவ்விடமுமாறுதோய்ந்தெல்லோரும்பல்பாம்பும்
வெவ்விடரினீங்கியெழும்வேங்கடமே தெவ்விடையே
பூட்டவனுகத்தனனாதிமறைநான்மார்க்கம்
விட்டவனுகத்தனையான் வெற்பு, (௬௯)

பாடுமதுகரமும்பச்சைதழைக்குடியின்
வேடுமணமருவும்வேங்கடமே நீடு
மகராலயங்கடந்தார்வாழ்வசுதேவருக்கு
மகராலயங்கடந்தார் வாழ்வு, ௭௰

ஆதிதிருவேங்கடமென்றாயிரம்பேரானிடமென்
றோதியவெண்பாவொருநூறுங் கோதில்
குணவாளபட்டிருகோகனத்தாள்சேர்
மணவாளதாசன்றன் வாக்கு (௭௧)

திருவேங்கடமாலை,

முற்றிற்று.